***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 56/2022 – P.W. 7 (LW-7)***

| | |
|---|---|
| *Name* | நாகநாதன் |
| *Father/Husband's Name* | முனுசாமி |
| *Village* | ஆலத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *52* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 06.02.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல. அ.சா.6 இளங்கோவன் என்பவரை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 12.09.2019-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் சம்பவயிடமான ஆலத்தூர் மெயின் ரோடு, ரவிச்சந்திரன் வீட்டிற்கு அருகில் அ.சா.1 னின் தந்தை முருகையன் என்பவர் மீது ஆஜர் எதிரி ஏற்படுத்திய விபத்து தொடர்பாக அன்றையதிதினமே 13.30 மணியளவில் போலீசார் சம்பவயிடத்தை சாட்சிகள் என் முன்னிலையிலும் இளங்கோவன் முன்னிலையிலும் சம்பவயிடத்தை

பார்வையிட்டு, பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை... இல்லை.**

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 06.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.